

# வெற்றிக்கான ரகசிய கூட்டுப் பொருள்!

காம்கேர் கே.புவனேஸ்வரி

ஒவ்வொரு வெற்றிக்கும் உழைப்பு, திறமை, கல்வி, முதலீடு இவற்றையெல்லாம் தாண்டி ஏதேனும் ஒரு ரகசியக் கூட்டுப்பொருள் காரணமாக இருக்கும். அதனால்தான் ஒரே படிப்பைப் படித்த, ஒரே மாதிரி திறமையுள்ள பலரின் வெற்றி, தோல்விகள் ஒன்றுபோல இருப்பதில்லை.

இன்றும் பல வீடுகளில் தம்பதியருக்குள் ஏற்படும் சண்டைகளில் முக்கிய இடத்தில் இருப்பது சாப்பாடு. ‘என்ன இருந்தாலும் என் அம்மா கைப்பக்குவம் போல் இல்லை’ என குறைபட்டுக்கொண்டு சாப்பிடும் கணவன்கள் இருக்கிறார்கள்.

அப்படி என்னதான் இருக்கிறது அம்மா சமையலில்? அதே உப்பு, புளி, காரம்தான். ஆனாலும் அம்மா சமையலை அடித்துக்கொள்ள முடிவதில்லை.

இப்படிச் சொல்லும் ஆண்களின் வீடுகளில் அம்மாக்கள் மட்டுமே சமையலறையில் புழங்கிக்கொண்டு இருந்திருப்பார்கள். அப்பாக்கள் காய்கறி கூட நறுக்கித் தந்து உதவியிருக்க மாட்டார். அம்மா, தன் வாழ்நாள் முழுவதும் எந்த வேலைக்கும் செல்லாமல், மூன்று வேளையும் நன்றாக சமைத்து பிள்ளைகள் பசி அறிந்து பரிமாறும் வேலையை மட்டுமே செய்துகொண்டிருப்பார். இப்படி பிள்ளைகளை கவனிப்பதை மட்டுமே பணியாகக் கொண்டிருக்கும் அம்மாக்களின் சமையல் சுவையாகத்தானே இருக்கும்! அம்மாக்களின் ‘கவனிப்பு’தான், அதில் ரகசிய கூட்டுப்பொருள்.

மனைவியும் அதேபோல சமையல் செய்தாலும், அம்மா தன் சுயத்தையே சமையலுக்காக ஒதுக்கி செதுக்கி வாழ்ந்துவிட்டதால், அவர்களின் சமையல் ருசியே பல ஆண்கள் மனதில் நீங்காமல் நின்றுவிடுகிறது. இதனால்தான் பல வீடுகளில் மகனுக்குத் திருமணம் ஆன பிறகும், சமையலறையை தங்கள் கைக்குள் வைத்துக்கொள்கிறார்கள் அம்மாக்கள். அவர்களுக்குத் தெரியும், ‘எந்த இடத்தில் வீட்டினரை தன் வசப்படுத்தி வைத்துக்கொள்ள முடியும்’ என்ற ரகசியம்.

சாதா டீ விற்றுக்கொண்டிருந்தவர், சிறிய யோசனை மூலம் ஐஸ் டீயை அறிமுகப்படுத்தி உலகப்புகழ் பெற்ற கதை தெரியுமா?

1904ம் ஆண்டு அமெரிக்காவில் மிசௌரியில் உள்ள செயின்ட் லூயிஸில் உலகக் கண்காட்சி ஒன்று நடந்தது. அதில் ரிச்சர்டு பிளெச்சி டென் என்பவர் டீ ஸ்டால் போட்டிருந்தார். கடுமையான கோடைக் காலமாக இருந்ததால், யாருமே டீ அருந்த வரவில்லை. அவர் மனம் தளரவில்லை. ஐஸ் கட்டியை டீயில் போட்டு, ‘கோடைக்கு இதமாக ஐஸ் டீ கிடைக்கும்’ என விற்க ஆரம்பித்தார். புதுவிதமான டீயைப் பருக அவர் ஸ்டாலில் கூட்டம் அலைமோதியது. ஐஸ் டீயை கண்டுபிடித்தவர் என்ற பெயரையும் அவர் பெற்றார்.

இப்படி தங்கள் பணியின் அடிப்படைத் தன்மையை மாற்றாமல், சூழலுக்கு ஏற்ப அதில் சிறு மாறுதல்களை மட்டும் செய்து உச்சத்துக்குச் செல்ல முடியும். இவரது வெற்றிக்குக் காரணம், ‘ஐஸ்’ எனும் ரகசியக் கூட்டுப் பொருள்.

1992, நம் நாட்டில் கம்ப்யூட்டர் மெல்ல மெல்ல அறிமுகமான காலம். சாஃப்ட்வேர் நிறுவனங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அந்த காலகட்டத்தில் நாங்கள் ‘காம்கேர் சாஃப்ட்வேர்’ நிறுவனத்தைத் தொடங்கியபோது மற்ற நிறுவனங்களைவிட எங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதற்கும் ஒரு ரகசிய கூட்டுப் பொருள்தான் காரணம்.

வங்கிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் என்று எல்லா பணியிடங்களிலும் கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தி, அவர்களின் அன்றாடப் பணிகளின் தகவல்களை கம்ப்யூட்டரில் பதிவாக்கும் வேலைகள் நடந்தன. பேப்பரில் பராமரிக்கும் தகவல்களை கம்ப்யூட்டர் ஷீட்களில் பிரின்ட் எடுத்தும், ஃப்ளாப்பிகளில் சேகரித்தும் அத்தனையையும் கம்ப்யூட்டர்மயமாக்க வேண்டும் என்பதே நோக்கம்.

ஆனால் நாங்கள் நினைத்ததைப் போல அது அத்தனை எளிதாக இல்லை. காரணம், கம்ப்யூட்டர் என்பதே படித்த சில இளைஞர்கள் மட்டுமே பயன்படுத்தும் சாதனமாக அப்போது இருந்தது. ‘ஆங்கிலம் தெரிந்தால் மட்டுமே கம்ப்யூட்டரைப் பயன்படுத்த முடியும்’ என்ற நம்பிக்கையும் இருந்தது. இந்த இரண்டையும் உடைத்தெறியாமல் தொழில்நுட்பத்தைப் பரவலாக்க முடியாது என்று புரிந்தது.

கம்ப்யூட்டரை மொழியுடன் இணைத்து யோசித்தேன். ‘கம்ப்யூட்டரில் ஆங்கில கீ போர்டில் டைப் செய்யும்போது, திரையில் தமிழில் எழுத்துகள் வெளிப்பட்டால் எப்படி இருக்கும்’ என கற்பனை செய்தேன். ஒரு வருடம் ஆராய்ச்சி செய்து, எங்கள் நிறுவனத்துக்காக ஃபான்ட் ஒன்றை உருவாக்கினேன். அப்போது இன்டர்நெட் நம் நாட்டில் எட்டிக்கூட பார்க்கவில்லை.

எங்கள் நிறுவன தமிழ் ஃபான்ட்டை கம்ப்யூட்டரில் நிறுவி, அந்தந்த பணிச் சூழலுக்கு ஏற்ப சாஃப்ட்வேர்களைத் தயாரித்தோம். கம்ப்யூட்டரையும் நாங்களே அசெம்பிள் செய்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்தோம். மெல்ல மெல்ல எங்களைச் சுற்றி இயங்கிக்கொண்டிருந்த மளிகைக்கடை, மெடிக்கல் ஷாப் முதற்கொண்டு வங்கிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் என எல்லாவற்றையும் கம்ப்யூட்டர்மயம் ஆக்கினோம்.

தமிழைத் தொடர்ந்து பின்னாட்களில், இந்தியாவில் எங்கெல்லாம் எங்கள் சாஃப்ட்வேர் பயன்பாட்டுக்கு வருகிறதோ, அங்கெல்லாம் அவரவர் தாய்மொழியிலேயே சாஃப்ட்வேர்கள் இயங்குமாறு வடிவமைத்தோம்.

**இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!**

ஒவ்வொரு வெற்றிக்கும் உழைப்பு, திறமை, கல்வி, முதலீடு இவற்றை எல்லாம் தாண்டி ஒரு ரகசிய கூட்டுப் பொருள் காரணமாக இருக்கும். ஒரு புதுமையான ஐடியா, மாறுபட்ட கண்ணோட்டம், சிறப்பான கஸ்டமர் சர்வீஸ்... இப்படி ஏதோ ஒன்று!



காம்கேர் கே.புவனேஸ்வரி

‘கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவோரின் மனதுக்கு அது நெருக்கமாக என்ன தேவை’ என்று யோசித்தபோது ‘மொழி’ என்பதுதான் என் மனதுக்குள் தோன்றிய ‘ரகசிய கூட்டுப் பொருள்’. எங்கள் நிறுவனத்தின் அஸ்திவாரமே அதுதான்.

நாம் பயன்படுத்தும் ஃபேஸ்புக்கையே எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அதிபர் மார்க் ஜூக்கர்பர்க், ஹார்வர்டு பல்கலைக்கழக மாணவர். அங்கு மாணவர்களும் பேராசிரியர்களும் ஆண்டின் இறுதியில் தங்கள் புகைப்படங்களுடன் தங்கள் விவரக் குறிப்பை எழுதி நினைவுப் புத்தகமாக்கும் வழக்கத்தை வைத்திருந்தனர். ‘அதை இன்டர்நெட் மூலம் வெளியிட்டால், யார் வேண்டுமானாலும் எங்கிருந்தும் எப்போதும் பார்க்கலாமே’ என்று அவருக்குத் தோன்றிய சிறிய யோசனைதான் அவரது பிரமாண்ட வெற்றிக்கான ‘ரகசியக் கூட்டுப் பொருள்’. 2004ம் ஆண்டு ‘ஃபேஸ்புக்’ என்ற பெயரில் கல்லூரி வளாகங்களைத் தாண்டி பொதுவெளிக்கு அதைக் கொண்டுவந்தார். அவரது ‘ரகசிய கூட்டுப் பொருள்’ மிக நன்றாகவே வேலை செய்கிறது இன்றளவும்.

இதுபோல ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னணியில் ஒரு ரகசியக் கூட்டுப் பொருள் இருக்கும். ரிஸ்க் எடுத்து செயல்படுவோருக்கு அது அவர்களுக்கே தெரியாமல் வெற்றியைக் கொடுக்கும். ●